# குழந்தைப் பராமரிப்பு பெருந்தொற்று EBT (P-EBT) குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

2022-2023 பள்ளி ஆண்டு (*31 மார்ச் 2023)*

---

**கேள்வி 1: குழந்தைப் பராமரிப்பு P-EBT என்றால் என்ன?**
பதில்: இது கோவிட்-19 பெருந்தொற்றின் போது 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தாருக்கு உதவ மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தற்காலிக உணவுப் பலன் திட்டமாகும்.

---

**கேள்வி 2: இந்தக் குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்களுக்குத் தகுதியுடையவர்கள் யார்?**
பதில்: ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுடன் 3SquaresVT பலன்களைப் பெறும் வெர்மோன்ட் குடும்பங்கள். குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்கள் ஒவ்வொரு மாதமும் செப்டம்பர் 2022 முதல் 11 மே 2023 வரை தகுதியான குடும்பத்தாருக்கு வழங்கப்படும். ஃபெடரல் பொது சுகாதார அவசரநிலை முடிவடைவதால், குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்கள் மே 11 அன்று முடிவடைகின்றன.

---

**கேள்வி 3: குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன் தொகை எவ்வளவு?**
பதில்: குழந்தைப் பராமரிப்பு P-EBT பலனானது செப்டம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் $34.79 ஆகும். பிப்ரவரி - மே 11 -க்கான விகிதம் இன்னும் கணக்கிடப்படவில்லை. மே மாதத்திற்கான குழந்தைப் பராமரிப்பு விகிதம் ஒரு சார்பு மதிப்பிடப்பட்ட விகிதமாக இருக்கும், ஏனெனில் பலன்கள் மாத நடுப்பகுதியில் முடிவடைகிறது.

---

**கேள்வி 4: கோடைக்கால குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன் வழங்கப்படுகிறதா?**
பதில்: மத்திய பொது சுகாதார அவசரநிலை மே 11 அன்று முடிவடைவதால், கோடைக்கால குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன் வழங்கப்படாது. பொது சுகாதார அவசரநிலை முடிவடையும்போது, வெர்மான்ட் கோடைக்கால குழந்தைப் பராமரிப்பு P-EBT பலனை வழங்க மத்திய சட்டம் அனுமதிக்கவில்லை.

---

**கேள்வி 5: குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்கள் எப்போது வழங்கப்படும்?**
பதில்: முதல் சுற்றுப் பலன்கள் (செப்டம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரையிலான காலத்திற்கு) ஏப்ரல் 2023 -இன் இறுதியில் வழங்கப்படும். P-EBT குழந்தைப் பராமரிப்புப் பலன்களுக்குத் தகுதியுடைய குழந்தைகள், குடும்பம் 3SquaresVT பலன்களைப் பெறும் ஒவ்வொரு மாதத்திற்கும் செப்டம்பர் முதல் ஜனவரி வரையிலான பலன் மாதங்களுக்கு ஒரு பணமளிப்பைப் பெறுவார்கள்.

பிப்ரவரி - மே 11 -க்கான பலன்கள் ஆகஸ்டு மாத இறுதியில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

**கேள்வி 6: எனது குடும்பத்தார் தகுதியுடையவர்களா என எப்படி நான் கண்டறிவது?**
பதில்: மேலே உள்ள தகுதி அளவுகோல்களின் அடிப்படையில், உங்கள் குழந்தை தகுதியானவரா என்பதை பொருளாதாரச் சேவைகள் பிரிவு (Economic Services Division, ESD) தீர்மானிக்கும். நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், நீங்கள் எப்படி, எப்போது பலனைப் பெறுவீர்கள் என்பதை விளக்கும் ஒரு கடிதத்தை ESD-இடமிருந்து பெறுவீர்கள்.

---

**கேள்வி 7: நாங்கள் தகுதியுடையவர்களாக இருந்தால், இந்தப் பலன்களை எவ்வாறு பெறுவோம்?**
பதில்: உங்கள் 3SquaresVT பலனுக்காக உங்கள் குடும்பத்தாருக்கு வழங்கப்பட்ட EBT அட்டையில் குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்கள் குறித்த விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

**கேள்வி 8: எனது குழந்தையை இரண்டு குடும்பத்தார் பராமரிக்கின்றனர். பலன் யாருக்குக் கிடைக்கும்?**
பதில்: ESD-ஆல் 3SquaresVT குடும்பத் தலைவராக பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பெரியவருக்கு பலன் தொகை அனுப்பப்படும்.

---

**கேள்வி 9: இந்தப் பலன் தொகையைக் கொண்டு நான் என்ன வாங்கலாம்?**
பதில்: USDA வலைத்தளத்தில் உள்ள தகுதிஎப்றும் உணவுப் பொருட்களின் பட்டியலைப் பார்க்கவும்.

---

**கேள்வி 10: எனது P-EBT அட்டையை நான் எங்கு பயன்படுத்தலாம்?**
பதில்: 3SquaresVT -ஐ ஏற்றுக் கொள்ளும் எந்த இடத்திலும் நீங்கள் உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அதைப் பயன்படுத்தலாம். அதில் வெர்மோன்ட்டில் உள்ள மளிகைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், கன்வீனியன்ஸ் கடைகள் மற்றும் பல விவசாயிகளின் சந்தைகள் ஆகியவை அடங்கும். மேலும் விவரங்களை DCF-இன் EBT வலைப் பக்கத்தில் அறிந்துகொள்ளவும்.

---

**கேள்வி 11: எனக்குக் குழந்தைப் பராமரிப்பில் உள்ள குழந்தைகள் யாரும் இல்லை. எனக்கு இந்தப் பலன் கிடைக்குமா?**
பதில்: ஆம். ஆறு வயதுக்குட்பட்ட மற்றும் 3SquaresVT -ஐப் பெறுகின்ற அனைத்துக் குழந்தைகளும் தகுதியுடையவர்கள்.

---

**கேள்வி 12: எனக்கு ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். அவர்கள் குழந்தைப் பராமரிப்பு P-EBT பலன்களைப் பெறத் தகுதியுடையவர்களா?**
பதில்: இல்லை. 3SquaresVT -ஐப் பெறுகின்ற மற்றும் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே இந்தப் பலன் கிடைக்கும். பள்ளி வயதுக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் பலன்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பள்ளி P-EBT FAQ-களைப் பார்க்கவும்.

---

**கேள்வி 13: நான் இந்தப் பலனைப் பெற விரும்பாவிட்டால் என்னவாகும்?**
பதில்: பங்கேற்பது தன்னார்வமானது. பங்கேற்க வேண்டாம் என நீங்கள் தேர்வுசெய்தால், உங்கள் 3SquaresVT EBT அட்டையில் வழங்கப்பட்டுள்ள கூடுதல் பலன்களைப் பயன்படுத்த வேண்டாம்.

---

**கேள்வி 14: P-EBT பலன்களைப் பயன்படுத்தாவிட்டால் அவை காலாவதியாகி விடுமா?**
பதில்: ஆம். 274 நாட்களுக்குள் அட்டையைப் பயன்படுத்தவில்லை என்றால், P-EBT பலன்கள் காலாவதியாகி விடும்.

---

**கேள்வி 15: என்னிடம் மேலும் கேள்விகள் உள்ளன. நான் எங்கே மேலும் அறிந்து கொள்ளலாம்?**
பதில்: கூடுதல் விவரங்களுக்கு, https://dcf.vermont.gov/esd/P-EBT -க்குச் செல்லவும் அல்லது 1-800-479-6151, விருப்பத்தேர்வு 7 -ஐ அழைக்கவும்.

VERMONT AGENCY OF HUMAN SERVICES DEPARTMENT FOR CHILDREN & FAMILIES

VERMONT AGENCY OF EDUCATION